# செய்திமடல்

மடல் 01 ஆண்டு 2020



விலை - ரூ.10

பசுமைச் சுவடுகள்

# நண்டும் முள்முருங்கும்

சிவப்பு பூக்கள்
முள்முருக்கம்.
மைனாக்கள் வரும், போகும்.

இலைகள் உதி-ர்-ந்-து
வெறும் கிளைகள்
முட்களுடன்.

நுனிகளில்
வளைந்த பூந்தண்டுகள்.

அடியில் உள்ள பெரியபூக்களை
மைனா கோதும்.
அவை பின்னரும் கோத,
நுனியில்,
வரவர, சிறிய
நலிந்து நீண்ட மொட்டுகள்.
பூப்போல.
அம்மா சொன்னாள்!
நண்டு சினைக்க
பூக்கும் முள்முருங்கு.
முள்முருங்குப் பூக்க சினைக்கும் நண்டுகள்.

நாளைக் காலை
சந்தைக்குப் போகலாம்.

***- 1979***

*-சிவலிங்கம் சண்முகம்*

சூழலை வளப்படுத்தலும், பாதுகாத்தலும், நிலைபேண் அபிவிருத்தி, தொடர்ச்சியான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் எனும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 25.08.2018 அன்று "பசுமைச் சுவடுகள்" அமைப்பு உருவாக்கப்பட்டது. இதுவரையில் மரநடுகை, பனை விதைப்பு, கடற் கரை சுத்தம் செய்தல், சீமைக்கருவேல அழிப்பு, விதைப்பந்து தயாரிப்பு, பொது வெளிக் கலந்துரையாடல், அனர்த்த நிவாரணம் ஆகிய செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். மக்களுடனான உரையாடல்களில் நம்பிக்கை கொண்டு பயணித்துக் கொண்டு இருக்கிறோம். சிறுவர்களுடன் இணைந்து களச் செயற்பாடுகளிலும், உரையாடல்களிலும் ஈடுபடுவதன் மூலம் தன்னுணர்ந்து செயற்படும் எதிர்காலச் சமூகத்தைக் கட்டமைக்கலாம் என நம்புகின்றோம்.

# மரநடுகை




*5.10.2018 அன்று காந்தியூர் முன்பள்ளியில் சிறுவர்களுடன் மரநடுகையும், மழை, மரம், தண்ணீர் பற்றிய உரையாடலும் இடம்பெற்றது.*

*29.06.2019 அன்று சாவகச்சேரி சின்ன இல்வாரைக் குளத்தைச் சுற்றி 36 மருத மரக் கன்றுகள் நடப்பட்டு குளங்கள், மரங்களின் தேவைப்பாடு, அங்கு காணப்படும் ஏனைய சுற்றுச் சூழல், சமூகப் பிரச்சனைகள், இப் பிரச்சனைகள் சார்ந்து மக்கள் மத்தியில் சரியான புரிதலை ஏற்படுத்த வெவ்வேறு தளங்களில் செயற்படக்கூடிய சுயாதீன குழுக்களின் தேவைப்பாடு பற்றியும் உரையாடப்பட்டது. உரையாடலின் முடிவில் அனைவரும் உரையாடப்பட்ட விடயங்கள் சார்ந்து தத்தமது தளங்களில் இயங்க வேண்டும் எனவும், பொதுப் பிரச்சனைகளின் போது ஒரு பொது நோக்கின் அடிப்படையில் ஒன்றாகச் செயற்பட வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.*

# பனைவிதைப்பு

*04.11.2018 அன்று கரணவாய் மேற்கு, கல்லுவம் பிரதேசத்தில் 1000 பனை விதைகள் விதைக்கப்பட்டு பனையின் முக்கியத்துவம், நிலத்தடி நீரைப் பாது காத்தல், நிலத்தடி நீரின் அளவை அதிகரித்தல், இயற்கை விவசாயம், இயற்கை விவசாயம் செய்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் சார்ந்து உரையாடப் பட்டது. இவ்விதைப்பின் பின்னர் எதிர்பார்த்த காலப்பகுதியில் விதைகள் எதுவும் முளைக்காததால் அதற்கான காரணங்கள் குறித்து அறிந்துகொள்ள பொதுவெளிக்கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டது. எதிர்காலத்தில் பனை விதைப்பில் ஈடுபடும்போது உரையாடப்பட்ட விடயங்களை கவனத்தில் எடுப்பதாக முடிவெடுக்கப்பட்டது.*



# அனர்த்த நிவாரணம்

*01.01.2019 அன்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேவில் GTMS பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்குவதில் ஒரு பகுதியளவு பங்களிப்பும், 16.01.2019 அன்று மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 32 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளும் செய்யப்பட்டன.*

# கடற்கரை சுத்தம் செய்தல்



*09.12.2018* அன்று மணற்காடு, *10.03.2019* அன்று பருத்தித்துறை முனை, *08.06.2019* அன்று தாளையடி ஆகிய கடற்கரைகள் சுத்தம் செய்யப்பட்டு நெகிழி, பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தல், மாற்றீடுப் பொருட்களை உற்பத்தி செய்தல், கடற்சூழல் பாதிக்கப்படுவதால் மொத்த உயிர்த் தொகுதியில் ஏற்படும் பிரச்சனைகள், கடற்கரைகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம், மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த, நம் ஒவ்வொருவரிடமும் காணப்பட வேண்டிய பண்பு மாற்றத்தின் முக்கியத்துவம் பற்றி உரையாடப்பட்டது.



# சீமைக்கருவேல அழிப்பு



*19.04.2019 அன்று ஆயத்தச்சந்தி (கரவெட்டி கிழக்கு), 11.05.2019 அன்று சோனப்பு வெளி(கரவெட்டி மத்தி), 27.07.2019 அன்று சோனப்பு வெளி (கரவெட்டி மத்தி) ஆகிய பகுதிகளில் காணப்பட்ட பகுதியளவு சீமைக் கருவேல மரங்கள் பிடுங்கி அகற்றப்பட்டு மக்களுடன் சீமைக்கருவேல மரங்களின் பாதக விளைவுகள், அவற்றை எவ்வாறு வினைத்திறனுடன் அழிப்பது, அவற்றை முற்று முழுதாக அழிப்பதற்குத் தேவைப்படும் சரியான புரிதலுடன் கூடிய தொடர்ச்சியான செயற்பாடுகள் பற்றி உரை யாடப்பட்டு சீமைக்கருவேலம் தொடர்பான துண்டுப்பிரசுரமும் விநியோ கிக்கப்பட்டது.*



# விதைப்பந்து தயாரிப்பு



*11.10.2019 அன்று குடத்தனை மேற்கு, வலிக்கண்டி காளிவயல் பிள்ளையார் கோவிலில் சிறுவர்களுடன் இணைந்து விதைப்பந்துகள் தயாரிக்கப்பட்டது. சூழலில் சிறுவர்களின் அவதானம், மரங்களின் முக்கியத்துவம், விதைகளை இனங்காணல், விதைப் பந்துகளின் வினைத்திறன் மிக்க தன்மை என்பன பற்றி அவர்களுடன் கேள்வி பதிலாக உரையாடப்பட்டது. இது போன்ற தொடர்ச்சியான செயற்பாடுகளும், உரையாடல்களும் சிறுவர்கள் மத்தியில் இயற்கை சார்ந்த உரையாடல்களுக்கான வழியை உருவாக்கும் என நம்புகின்றோம்.*





# பொதுவெளிக் கலந்துரையாடல்




*06.01.2019 அன்று "சூழலியல் சார்ந்த செயற்பாடுகளின் தேவையும், அமைப் புக்களின் வகிபாகமும், இயற்கை விவசாயம் ஒரு அனுபவப் பகிர்வு, மியோ வாக்கிக் காடுகள் ஓர் அறிமுகம்" ஆகிய தலைப்புக்களிலும், 03.02.2019 அன்று "சீமைக்கருவேல மரங்களின் ஆக்கிரமிப்பும் அவற்றை வினைத்திறனுடன் அழித்தலும்" எனும் தலைப்பிலும், 10.12.2019 அன்று "பனை விதைப்பும் நடை முறைச் சிக்கல்களும்' எனும் தலைப்பிலும் கலந்துரையாடல்கள் நிகழ்த் தப்பட்டன. நாம் மேற்கொள்ளும் செயற்பாடுகளின் தேவையும், அவை சார்ந்து மக்களுக்குத் தெரியப்படுத்தவும், வெவ்வேறு தளங்களில் இருக்கும் மக்களின் குறித்த விடயங்கள் சார்ந்த நிலைப்பாட்டினை அறிந்து கொண்டு அவற்றை ஆராய்ந்து தேவைக்கேற்ப எமது நிலைப்பாடுகளில் வினைத்தி றனான மாற்றங்களை மேற்கொண்டு பயணிப்பதற்கான ஒரு வெளியாக பொது வெளிக் கலந்துரையாடல் அமையுமென நாம் நம்புகின்றோம்.*



# திரைப்படம் திரையிடல்




*07.01.2020 அன்று குடத்தனை மேற்கு, வலிக்கண்டி முன்பள்ளிக் கட்டடத்தில் சிறுவர்களுக்கான ”திரையிடலும் கலந்துரையாடலும்” நிகழ்வில் “ ice age - 1” திரைப்படம் திரையிடப்பட்டு, திரைப்படம் குறித்த அவர்களின் அவதானங்க-ளான இயற்கை, விலங்கு நடத்தைகள், அவற்றில் ஏற்படும் பண்புமாற்றங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.*



# கதை கூறல்



*07.02.2020 அன்று தும்பளை மேற்கு, அரும்புகள் முன்பள்ளியில் சிறுவர்களுக் கான “கதைகூறல்” நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் விலங்குகள், மரங்கள், கடலுயிரிகள் என்பனவற்றின் இயல்புகள், மனித மனங்களின் கற்பனையின் பன்மைத்துவம் என்பன பற்றி கேள்வி விடைகளாகவும், செயற்பாடுகளாகவும் கதைகள் வழியாக உரையாடப்பட்டது.*



# நெதர்லாந்தைக் காப்பாற்றிய சிறுவன்

நெதர்லாந்தின் பெரும்பகுதி கடல் மட்டத்திற்குக் கீழே உள்ளது. கடலுக்கு அடியில் வாழும் நிலமாக அது இருந்தது. ஆனால் இப்போது கடல் அணைக்கட்டுகளால் கடல் தடுக்கப்படுகிறது. அலைகள் மோதி நுரைக்கும் அணைக்கட்டுகள் பார்க்க வடிவாயிருக்கும். இயற்கையான அழகான இடமாக அது இருந்து வந்தது.

முன்னொரு காலத்தில் அங்கு ஹான்ஸ் பிரிங்கர் என்ற எட்டு வயதுச் சிறுவன் அவனது பெற்றோருடன் வாழ்ந்து வந்தான். ஒருநாள் அவன் ஒரு பழைய சாப்பாட்டுக் கடையைப் பற்றிக் கேள்விப்பட்டு, அக் கடை-க்குச் செல்வதற்கு முடிவெடுத்தான். அது ஊரிலேயே புகழ் பெற்ற கடை. அக் கடையில் வீட்டில் தயாரிக்கப் பட்ட சிற்றுண்டிகளை விற்பார்கள். அவை நல்ல மணத்துடனும் உண்ப-தற்குச் சுவையாகவும் இருக்கும்.

ஹான்ஸ், கடைக்குப் போய் உணவு-களை வாங்கிவிட்டு வீட்டிற்குத் திரும்பும் வழியில் தண்ணீர் 'சலக் சலக்' என்று சிந்தும் சத்தம் கேட்டு, எங்கிருந்து வந்தது என்று ஆச்சரியப்பட்டான். காதைக் கூர்மையாக்கி உற்றுக் கவனித்த போது அணைக்கட்டில் சிறிய துளை ஒன்றைக் கண்டான். துளை பெரிதாகிவிட்டால் ஊரே வெள்ளத்தில் மூழ்கும் என்பது அவனுக்குத் தெரியும்.

ஹான்ஸ் அணைக்கட்டில் ஏறி, தண்ணீரைத் தடுக்கத் துளைக்குள் விரலை வைத்தான். அந்தத் துளை கொஞ்சம் கொஞ்சமாக விரியத் தொடங்கியது. எதிர்பாராத விதமாக மழையும் பெய்யத் தொடங்கியது. யாராவது ஒருவர் அந்தப் பாதையால் வருவார்கள். அவர்களிடம் சொல்லி ஊரில் இருந்து ஆட்களைக் கூப்பிடலாம் என்று ஹான்ஸ் காத்திருந்தான். ஆனால் நெடு நேரமாகியும் யாரும் வரவில்லை. இருட்டத் தொடங்

கியது. ஹான்ஸிற்குக் கடுமையாகக் குளிரத் தொடங்கியது. துளையும் விரிந்து கொண்டே சென்றது. தனது இரண்டு கைகளையும் வைத்து அதை அடைத்தான்.

ஹான்ஸ் இரவு முழுவதும் தனது இரண்டு கைகளால் துளையை மூடியபடி மிகுந்த களைப்புடன் இருந்தான். ஆனாலும் ஊரைக் காப்பாற்றும் எண்ணம் அவனை நித்திரை கொள்ள விடவில்லை.

விடியற்காலையில் தான் அவனது ஊரைச் சேர்ந்த ஒருவர் அந்தப் பாதையில் வந்தார். அவர் ஹான்ஸைப் பார்த்தார். 'நீங்கள் அங்கு என்ன செய்கிறீர்கள்?' என்று அவர் கேட்டார். 'நான் தண்ணீரைத் தடுத்து நிறுத்துகிறேன்' என்று ஹான்ஸ் கூறினான். 'தயவு செய்து உதவி பெறுங்கள்'.

உடனே ஊருக்கு விரைந்து சென்ற அவர் உதவிக்கு ஊர் மக்களைத் திரட்டி வந்தார். ஊர் மக்கள் வந்த போது இரவு முழுவதும் நித்திரை கொள்ளாமல் கண்கள் சிவந்து வீங்கிய நிலையிலும் அந்தத் துளை பெரிதாகி விடாமல் தன் கைகளை வைத்து அதை மூடியபடி உறுதியாக நின்ற ஹான்ஸைப் பார்த்து அதிசயித்தனர். உடனடியாகத் துளையை அடைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது, ஹான்ஸிற்கு உணவு கொடுத்தார்கள். இரவு முழுவதும் நித்திரை கொள்ளாத ஹான்ஸ் அவனது அம்மாவின் தோளிலேயே நித்திரை கொள்ளத் தொடங்கி விட்டான்.

நெதர்லாந்தில் உள்ள அனைவரும் அந்தச் சிறுவனின் நல்ல குணத்தையும், சிந்திக்கும் திறனையும், அவன் ஊரையும் மக்களையும் நேசித்து வெள்ளத்தில் இருந்து தங்களைக் காப்பாற்றியதையும் மிகவும் பாராட்டினர். அச் சிறுவனின் கதையைத் தங்கள் குழந்தைகளுக்குச் சொல்லினர்.

நெதர்லாந்து நாட்டுப்புறக் கதை
ஆங்கில வழி மூலம் தமிழில் தழுவல் – கிரிசாந்த்


**ஆசிரியர் குழு**
வசிகரன்
விதுர்சா
கணநாதன்
ரஜிதா
துவாரகா

**முகநூல் பக்கம்**
fb.com/greentrails2018

**அட்டைப்படம்**
திவ்யா(தரம் 9)

**இதழ் வடிவமைப்பு**
தனுயன்

**அட்டைப்பட வடிவமைப்பு**
பிரதீப்

**ஒளிப்படங்கள்**
சன்சிகன், பிரசாந், விசாகன்

**தொடர்புகளுக்கு**
pasumaisuvadukal@gmail.com